**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102075

1. District மாவட்டம் : VELLORE  PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர்.  Year: ஆண்டு  FIR No.: மு.த.அ. எண் 5/18  Date: நாள் 08.03.2018.

2. (i) Act சட்டம்: P.C. Act 1988.  Sections பிரிவுகள்: 102 Crpc, r/w 13(2), r/w 13(1)(d) of P.C. Act 1988.
   (ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 08.03.18  Date to : நாள் வரை 08.03.2018.
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் 1500 hrs  Time to : நேரம் வரை 17.45 hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 08.03.2018.  Time நேரம் : 15.00 hrs. and 23.00 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 08.03.2018  Time நேரம் : 15.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  எழுத்து மூலமாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி ஆம்பூர், ராஜீவ் காந்தி சிலை அருகில் உள்ள டாஸ்மாக் கடை அருகில்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் L. குமார்  (b) Father's/ ~~Husband~~'s Name : தந்தை / கணவர் பெயர் T.K. லக்ஷ்மணன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 54/18  (d) Nationality நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில்  (g) Address : முகவரி நகராட்சி பொறியாளர் மற்றும் பொறுப்பு ஆணையாளர், ஆம்பூர் நகராட்சி, ஆம்பூர், வேலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. திரு. K. திருநதைவேல் s/o காளியப்பன், துணை ஆட்சியர், சிறப்பு பறக்கும் படை டாஸ்மாக், சேலம் மண்டலம், சேலம்.
   2. திரு. C. முருகேசன் 43/18 s/o சின்னதம்பி, உதவி மேற்பார்வையாளர், டாஸ்மாக், கொட்டவேப்பிலைபட்டி, காடையாம்பட்டி Tk, சேலம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   "தாமதம் இல்லை"

9. **Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)**
**களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)**

—

10. **Total value of properties stolen / involved :**
**களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு** —

11. **Inquest Report / Un-natural death Case No. if any:**
**பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்** —

12. **FIR Contents (Attach separate sheet, if required) :**
**முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)**

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. **Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.**

**எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.**

**FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.**
**மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.**

8/3/18 — 08/03/18

14. **Signature / Thumb Impression of the Complainant / Informant**
**குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு**

**Signature of the Officer in-charge, Police Station**
**காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்**

15. **Date & Time of despatch to the court:** 08-03-2018
**நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்**

**Name: பெயர்** S. விஜய்
**Rank: நிலை** காவல் ஆய்வாளர் **No. எண்** .........
உ.நி.க. பிரிவு,
வேலூர்.

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:</u> வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் S.விஜய் ஆகிய நான் 08.03.2018-ம் தேதி இரவு 23.00 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, புகார்தாரர் திரு.L.குமார், த/பெ. லஷ்மணன், நகராட்சி பொறியாளர் மற்றும் பொறுப்பு ஆணையர், ஆம்பூர் நகராட்சி, ஆம்பூர், வேலூர் மாவட்டம் என்பவர் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்த தட்டச்சு செய்யப்பட்ட புகாரை உத்தரவுபடி பெற்று பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் விவரம் பின்வருமாறு. அனுப்புநர் L. குமார், த/பெ. லஷ்மணன், நகராட்சி பொறியாளர் மற்றும் பொறுப்பு ஆணையர், ஆம்பூர் நகராட்சி, ஆம்பூர், வேலூர் மாவட்டம். பெறுநர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அய்யா, இன்று 08.03.2018-ந் தேதி 16.45 மணிக்கு நான் அலுவலகத்தில் பணியிலிருந்தபோது வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட வேண்டுகோளின் கடிதத்தின் பேரில் 17.30 மணி முதல் 20.15 மணி வரையில் ஆம்பூர் உமராபாத் சாலையில் அமைந்துள்ள மதுபானகடை எண்.11082 அருகில் என் முன்னிலையிலும் என்னுடன் அரசு சாட்சியாக வந்திருந்த திரு.பாக்கியநாதன் முன்னிலையிலும் சுமார் 17.30 மணிக்கு ஆம்பூர் பேருந்து நிலையம் எதிரே சந்தித்து ஆய்வாளர் அவருக்கு கிடைத்த தகவல் சம்மந்தமாக விளக்கி கூறி தகவலாளர் சொன்ன TN 39 BD 4191 என்ற பதிவு எண் கொண்ட Ford Figo காரில் சேலம் TASMAC சிறப்பு பறக்கும் படை துணை ஆட்சியர் திரு.குழந்தைவேல் என்பவர் வேலூரிலிருந்து லஞ்சமாக பணம் வசூல் செய்து கொண்டு ஆம்பூர் நோக்கி வருவதாகவும் அது சம்மந்தமான நடவடிக்கை மேற்கொள்ள உடனிருந்து நிகழ்வுகளை கவனிக்குமாறு கூறினீர்கள். அப்போது ஆய்வாளரை கூறிய TN 39 BD 4191 என்ற பதிவு எண் கொண்ட Ford Figo என்ற வாகனம் எங்களை கடந்து சென்றது அந்த வாகனத்தை பின் தொடர்ந்து செல்ல மேற்படி வாகனமானது ஆம்பூர் ராஜீவ் காந்தி சிலை சிக்னலில் நின்று வலப்புறமாக திரும்பி உமராபாத் செல்லும் சாலையில் சுமார் 50 மீட்டர் தூரத்தில் இடது புறமாக இருந்த R.K. பிரியாணி ஓட்டல் மற்றும் அதை அடுத்து இருந்த நிதீஷ் பேக்கரி என்ற கடைக்கு அருகில் சென்று அந்த வாகனம் நின்றது. தொடர்ந்து கண்காணித்தபோது சுமார் 45 முதல் 50 வயது மதிக்கத்தக்க இரண்டு ஆண் நபர்கள் மேற்சொன்ன இரு கடைகளுக்கும் இடையே இருந்த வழியிலிருந்து (சந்து) வெளியே வந்து காரில் முன் இருக்கையில் அமர்ந்திருந்த நபரிடம் ஏதோ பேசிவிட்டு அவர் கையில் இருந்து இருவரும் தனித்தனியே பணத்தை எடுத்துக் கொடுக்க அந்த நபர் அதை வாங்கிகொண்டார். மேலும் அந்த இரு நபர்களும் காரின் பின் இருக்கையில் ஏற்கனவே அமர்ந்திருந்த மற்றொரு நபருடன் ஏறி அமர்ந்து கொண்டனர். உடனே அரசு சாட்சிகள் மற்றும் குழுவினருடன் அந்த காரின் அருகே சென்று பார்க்க முன் இருக்கையில் அமர்ந்திருந்தவரும் பின் இருக்கையில் ஏற்கனவே அமர்ந்திருந்த ஒரு நபரும் பணத்தை கத்தை வைத்துக் கொண்டு எண்ணி கொண்டிருந்தனர். அப்போது உள்ளே இருந்த 5 நபர்களிடம் எங்களை அறிமுகம் செய்து கொள்ள கையில் பணம் வைத்திருந்த முன் இருக்கை மற்றும் பின் இருக்கையில் அமர்ந்திருந்த இருவரும் அவர்கள் கையிலிருந்த பணத்தை காரின் உள்ளே கீழே போட்டு விட்டனர். படபடப்பாக இருந்தவர்களை ஆசுவாசப்படுத்திவிட்டு, முன் இருக்கையில் இருந்தவரை விசாரிக்க அவர் தன் பெயர் திரு.K.குழந்தைவேல் என்றும் தான் TASMAC, சேலம் மண்டலம் சிறப்பு பறக்கும் படை துணை ஆட்சியராக பணி செய்து வருவதாக கூறினார். மேலும் அவரை விசாரிக்க அவர் தான் TASMAC மதுபான விற்பனை கடைகளில் மேற்பார்வையாளர் மற்றும் விற்பனையாளர்களிடமிருந்து அலுவலக செலவு வாகன டீசல் செலவு மற்றும் இதர செலவுகளுக்காக பணம் வசூல் செய்வதாகவும் இது ஒவ்வொரு மாதமும் வசூலிப்பதாகவும் கூறினார். பின்னர் காரில் அவர் அமர்ந்திருந்த

இருக்கைக்கு கீழே போட்ட பணத்தை எடுத்து அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணி பார்க்க அவை ரு. 15,000/- இருந்தது. அப்பணத்தை ஏன் கீழே போட்டீர்கள் என்றும் அப்பணம் குறித்தும் கேட்க, அதற்கு அவரால் தகுந்த முகாந்திரம் கொடுக்க முடியவில்லை. எனவே அப்பணம் ரு.15,000/- வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. ஓட்டுனர் இருக்கையில் இருந்த நபரை விசாரணை செய்ய அவர் தன் பெயர் திரு.M. மணிகண்டன் தான் வாடகை கார் ஓட்டுநராக பணி செய்து வருவதாக கூறினார். பின் இருக்கையில் இருந்த நபரை விசாரணை செய்ய அவர் தன் பெயர் திரு. முருகேசன் என்றும் தான் உதவி மேற்பார்வையாளராக TASMAC கடை எண்.7108, காட்டுவேப்பிலை பட்டி, வாழப்பாடி தாலுக்கா, சேலம் மாவட்டத்தில் பணிபுரிவதாக கூறினார். பின்னர் காரில் அவர் அமர்ந்திருந்த இருக்கைக்கு கீழே போட்ட பணத்தை எடுத்து அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணி பார்க்க அவை ரு. 58,000/- இருந்தது. அப்பணத்தை ஏன் கீழே போட்டீர்கள் என்றும் அப்பணம் குறித்தும் கேட்க, அதற்கு அவரால் தகுந்த முகாந்திரம் கொடுக்க முடியவில்லை. எனவே அப்பணம் ரு.58,000/- இருந்ததை வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும் பின் இருக்கையில் இருந்த இரண்டு நபர்களை விசாரணை செய்ய தன் பெயர் விஜயகுமார் மற்றும் பாண்டியன் என்றும் தாங்கள் இருவரும் ஆம்பூர் மதுபான விற்பனை கடையில் பணி செய்து வருவதாக கூறினர். அந்த இடத்தில் மேற்படி நபர்களை திரேக சோதனை செய்யவோ வாகன சோதனை செய்யவோ செயல்முறை தயார் செய்யவோ போதிய வசதி இல்லாததால் அவர்களை அருகிலிருந்த TASMAC கடை எண். 11082 பக்கத்தில் காலியாக இருந்த குடோனுக்கு சுமார் 18.00 மணிக்கு அவர்களை அழைத்து சென்று அங்கு சோதனை மேற்கொள்ளப்பட்டது. இச்சோதனை ஆரம்பிக்கும் முன்னர் நாங்கள் அனைவரும் சுயபரிசோதனை செய்து கொண்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது. சோதனை மேற்கொள்ளப்பட்ட இடமானது வேலூர் மாவட்டம் ஆம்பூர் மேல்கிருஷ்ணாவரம் முதல் லேனில் உள்ள TASMAC கடை எண். 11082 பக்கத்தில் காலியாக உள்ள குடோனானது திரு.ராஜா த/பெ. அண்ணாசாமி, எண்.44/37, பைபாஸ் சாலை ஆம்பூர் என்பவருக்கு சொந்தமான இடமாகும். அந்த காரில் இருந்த 3 நபர்களையும் அவர்களுக்கு பணம் கொடுத்த இருவரையும் அழைத்து கொண்டு குடோனுக்குள் வந்து விசாரித்து அவர்களை சோதனை செய்யப்பட்டது. சோதனையின் போது முதலாவது நபரை விசாரணை செய்ய அவர் தன்னுடைய பெயர் திரு.K.குழந்தைவேல் த/பெ. காளியப்பன் என்றும் தான் TASMAC, சேலம் மண்டலம் சிறப்பு பறக்கும் படை துணை ஆட்சியராக பணி செய்து வருவதாகவும், தான் சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், அரக்கோணம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் ஒவ்வொரு மாதமும் குறைந்தது 40 முதல் 50 TASMAC மதுபான விற்பனை கடைகளில் இருப்பையும் விற்பனையையும் ஒப்பிட்டு ஆய்வு மேற்கொள்ளுதல் அதில் ஏதாவது மிகையாகவோ அல்லது பற்றாகுறையாகவோ இருப்பின் அது குறித்து அறிக்கையினை மாவட்ட மேலாளர், TASMAC, முதல்நிலை மண்டல மேலாளர், சேலம் - மற்றும் மேலாண்மை இயக்குநர், TASMAC, சென்னை ஆகியோருக்கு அனுப்பி வைப்பது மற்றும் MRP விலைக்கு மேல் கூடுதலாக விற்பனை செய்யும் TASMAC விற்பனையாளர்கள் மீது நடவடிக்கை மற்றும் சில்லரை விற்பனை செய்யும் TASMAC விற்பனையாளர்கள் மீது நடவடிக்கை எடுப்பது தனது பணி என்று கூறினார். அவரை திரேக சோதனை செய்ய அவரது சட்டையின் மேல்பாக்கெட்டில் ரூபாய் 30,000/- இருந்தது. அவருடைய பேண்ட் பாக்கெட்டில் பணம் ரு.20,000/- இருந்தது மற்றும் அவர் வைத்திருந்த கருப்பு நிற தோலினாலான கைப்பையை சோதனையிட அதில் ரு.60,000/- இருந்தது. ஆக மொத்தம் அவரிடம் பணம் ரு.1,10,000/- இருந்தது. அப்பணம் குறித்து கேட்க, அதற்கு அவரால் தகுந்த முகாந்திரம் கொடுக்க முடியவில்லை. விளக்கம் கேட்க எதற்கும் பதில் அளிக்காமல் தலைகுனிந்து கொண்டு அமைதியாக இருந்தவர் வசூல் செய்த பணம் தான் என்று கூறினார். எனவே, அவரிடம் இருந்த மொத்த பணம் ரு.1,10,000/-ம்

கருப்பு நிற தோலினாலான பையையும் வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. இரண்டாவது நபரை விசாரணை செய்ய அவர் தன் பெயர் திரு.C.முருகேசன் (43/18), த/பெ. சின்னதம்பி என்றும் தான் உதவி மேற்பார்வையாளராக TASMAC கடை எண்.7108, காட்டுவேப்பிலை பட்டி, வாழப்பாடி தாலுக்கா, சேலம் மாவட்டத்தில் பணிபுரிவதாக கூறினார். அவரை திரேக சோதனை செய்ய அவரது பேண்ட் பாக்கெட்டில் ரூபாய் 63,000/- இருந்தது. தகுந்த முகாந்திரம் கொடுக்க முடியவில்லை. எனவே அப்பணம் ரு.63,000/- வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மூன்றாவது நபரை விசாரணை செய்ய அவர் தன் பெயர் திரு.M. மணிகண்டன் (23/18), த/பெ. முருகன் என்றும் தான் எண்.1/245, ஆதிதிராவிடர் தெரு, ஆத்துமேடு, வண்டிபட்டரை, வெள்ளாளபட்டி, ஓமலூர் தாலுக்கா, சேலம் மாவட்டம் என்ற விலாசத்தில் வசித்து வருவதாகவும், தான் கடந்த நான்கு வருடங்களாக ஓட்டுநர் பணி செய்து வருவதாகவும், கடந்த இரண்டு மாதங்களாக திரு.குழந்தைவேல், துணை ஆட்சியர் அவர்கள் அவ்வப்போது அழைக்கும் போது அவருக்கு தற்காலிக ஓட்டுநர் பணி செய்து வருவதாகவும், அவர் கூறும் வாகனத்தை தான் ஓட்டுவதாகவும் கூறினார். தான் தற்போது ஓட்டி வந்த TN 39 BD 4191 என்ற வாகன எண் கொண்ட Ford Figo கார் தன்னுடையது இல்லை என்றும் கூறினார். அவரை திரேக சோதனை செய்ய அவரிடம் பணம் ஏதும் இல்லை. நான்காவது நபரை விசாரணை செய்ய அவர் தன் பெயர் திரு. K. விஜயகுமார் (43/18), த/பெ. கனகேசன் என்றும் தான் விற்பனையாளராக TASMAC கடை எண். 11084, ஆம்பூர், வேலூர் மாவட்டத்தில் பணி செய்து வருவதாகவும், தான் திரு.குழந்தைவேல், துணை ஆட்சியர் அவர்கள் ஒவ்வொரு மாதமும் ஆம்பூரில் உள்ள மதுவிற்பனை கடைகளில் லஞ்சமாக பணம் வசூல் செய்து கொடுக்க சொல்வார், நாங்கள் முடியாது என்றால் எங்கள் மேல் நாங்கள் தவறு செய்யவில்லையென்றாலும் தவறு செய்ததாக நடவடிக்கை எடுத்து எங்கள் பணிக்கு தொந்தரவு கொடுப்பார்கள். அதை தவிர்க்கவே அவரது அதிகாரத்திற்கு பயந்து நாங்கள் வேறு வழியின்றி வசூல் செய்து கொடுத்தோம். அதன்பேரில் இன்று 08.03.2018 பகல் சுமார் 12.30 மணிக்கு சேலத்தை சேர்ந்த மேற்பார்வையாளர் திரு.முருகேசன் என்பவர் 9159723300 என்ற செல்போன் எண்ணிலிருந்து என்னுடைய செல்போன் எண்.9597729367-க்கு என்னை தொடர்பு கொண்டு ஆம்பூர் வந்து வசூல் செய்த பணத்தை கொடுக்குமாறு கூறியதாக சொன்னார். மீண்டும் மாலை சுமார் 05.30 மணிக்கு போன் செய்து இன்னும் 10 நிமிடத்தில் ஆம்பூர் வந்துவிடுவதாகவும் பணத்துடன் தயாராக இருக்கும்படி கூறினார். அதன்படி சுமார் 05.45 மணிக்கு ஆம்பூர் வந்தனர். நானும் TASMAC கடை எண். 11325 மேற்பார்வையாளர் திரு.பாண்டியனும் சேர்ந்து திரு.குழந்தைவேல் அவர்களின் உத்தரவுபடி வசூல் செய்த பணம் ரு.15,000/- திரு.குழந்தைவேல் அவர்களிடம் கொடுத்துவிட்டதாக கூறினார். மேலும் திரு.விஜயகுமார் திரேக சோதனை செய்ய அவரிடம் பணம் ஏதும் இல்லை. ஐந்தாவது நபரை விசாரணை செய்ய அவர் தன் பெயர் திரு. V. பாண்டியன் (51/18), த/பெ. வேணு என்றும் தான் மேற்பார்வையாளராக TASMAC கடை எண். 11325, ஆம்பூர், வேலூர் மாவட்டத்தில் பணி செய்து வருவதாகவும் தான் விற்பனையாளராக TASMAC கடை எண். 11084-ல் பணிபுரியும் திரு. விஜயகுமாருடன் சென்று திரு.குழந்தைவேல் அவர்களின் உத்தரவுபடி விஜயகுமார் வசூல் செய்த பணம் ரு.15,000/- திரு.குழந்தைவேல் அவர்களிடம் கொடுத்துவிட்டதாக கூறினார். மேலும் திரு.பாண்டியனை திரேக சோதனை செய்ய அவரிடம் பணம் ஏதும் இல்லை. பின்னர் திரு.குழந்தைவேல் வந்த வாகனம் TN 39 BD 4191 பதிவு எண் கொண்ட வெள்ளை நிற Ford Figo காரை சோதனை செய்ய அதில் முன் இருக்கையின் கால் வைக்கும் பகுதியில் போடப்பட்டிருந்த கருப்புநிற விரிப்புக்கு அடியில் கத்தையாக பணம் இருந்தது. அப்பணத்தை எடுத்து எண்ணிப் பார்க்க அவை ரு.55,000/- இருந்தது. மேலும் காரின் பின் இருக்கைக்கு பின் பகுதியில் பொருட்கள் வைக்கும் இடத்தில் போடப்பட்டிருந்த

விரிப்புக்கு கீழே கத்தையாக பணம் இருந்தது. அப்பணத்தை எடுத்து எண்ணிப் பார்க்க அவை ரூ.40,000/- இருந்தது. அப்பணம் குறித்து திரு.குழந்தைவேல், துணை ஆட்சியர் அவர்களிடம் விளக்கம் கேட்க, அவர் பதில் ஏதும் கூறாமல் அமைதியாக இருந்தார். எனவே, உரிமை கோராத கேட்பாரற்று மறைத்து வைக்கப்பட்டிருந்த் கணக்கில் வராத பணம் ரூ.95,000/-ஐ வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும், இவ்வாகனத்தை சுமார் கடந்த ஒரு வருட காலமாக பயன்படுத்தி வருவதாகவும் வாகனத்தின் உரிமையாளர் யார் என்று தனக்கு தெரியாது என்றும் தனக்கு ஓட்டுநர்களாக மணிகண்டன் மற்றும் பிரசாந்த் ஆகியோர் உள்ளனர் என்றும், வாகனம் எப்போதும் சேலத்தில் உள்ள தன்னுடைய அலுவலகம் மற்றும் தான் தங்கியுள்ள வீட்டில் தன்னுடைய பொறுப்பில் தான் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் என்றும், தன்னுடைய வரம்புற்குட்பட்ட ஆறு மாவட்டத்தில் உள்ள மதுபான விற்பனை கடைகளை ஆய்வு செய்ய இந்த வாகனத்தில் தான் செல்வதாகவும் கூறினார். வசூல் செய்த லஞ்சப் பணத்தை மறைத்து வைத்திருந்த வாகனம் TN 39 BD 4191 பதிவு எண் கொண்ட வெள்ளை நிற Ford Figo காரை வழக்கின் நிமத்தம் கைப்பற்றப்பட்டது. தக்க முகாந்திரம் கூற இயலாத யாரும் உரிமை கோராத மற்றும் கணக்கில் வராத கைப்பற்றப்பட்ட பணம் ரூ.3,41,000/-, கருப்புநிற Leather Bag மற்றும் கைப்பற்றப்பட்ட வாகனம் TN 39 BD 4191 என்ற பதிவு எண் கொண்ட Ford Figo ஆகியவற்றை தங்களிடம் ஒப்புவிக்கிறேன். மேலும் லஞ்சமாக பணம் வசூல் செய்த திரு.குழந்தைவேல், துணை ஆட்சியர் அவர்கள் தன்னுடைய பதவியை துஷ்பிரயோகம் செய்து மதுபான விற்பனை கடையில் பணிசெய்யும் மேற்பார்வையாளர் மற்றும் விற்பனையாளர் ஆகியோரை மிரட்டியும் அவர்கள் செய்யும் தவறுகளை ஆய்வு மேற்கொண்டு கண்டறிந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருப்பதற்காகவும் லஞ்சமாக கட்டாய பணம் வசூல் செய்ய பயன்படுத்திய மற்றும் திரு.முருகேசன், உதவி மேற்பார்வையாளர் ஆகியோர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சட்டபடியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, நகராட்சி பொறியாளர் பொறுப்பு ஆணையர், ஆம்பூர், வேலூர் மாவட்டம்.

Inspr. Mr.S.Vijay: Pls. receive the complaint and register a case as per law and take up for investigation. Sd (xxxxx) 08/03/18 (M.Balasubramanian) Addl. SP/SIC/VAC/CNI OD at Vellore Detachment.

Sir, Received the complaint on 08/03/2018 at 23.00 hrs. and registered a case in V&AC, Vellore Detachment Cr.No.05/2018, U/s 102 CrPC r/w 13(2) r/w 13(1)(d) of Prevention of Corruption Act, 1988. Sd(xxxx) 08/03/2018 (S.Vijay). The original FIR submitted to the Chief Judicial Magistrate and Special Judge, Vellore and other copies of FIR, submitted to the officers concerned.

13. Action Taken : A case in Vigilance and Anti-Corruption, Vellore Cr.No.05/2018, U/s 102 CrPC r/w 13(2) r/w 13(1)(d) of Prevention of Corruption Act, 1988 against A-1 and A-2.

The original FIR submitted to the Chief Judicial Magistrate and Special Judge, Vellore and other copies of FIR, submitted to the officers concerned.

08/03/18
(S.VIJAY)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Vellore.

14. Signature thumb impression of the complainant/informant: Obtained in first sheet.

15. Date and Time of Despatch to the Court: 08.03.2018 at 23.30 hrs.

Submitted to the Hon'bl Chief Judicial Magistrate-cum-Special Judge, Vellore.